திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டங்களுக்காக நகராட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அதேமாதிரி கிராமப்பகுதியாக இருந்தால் மானியமாக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மத்திய அரசு அல்லது மாநில அரசு வழங்கி வருகிறது. அந்த அடிப்படையில் இந்தப் பேரூராட்சிக்கு அளிக்கப்பட்ட கடன் தொகையையும் ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்படிச் செய்வதற்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண் 480 — திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் இணைப்புத் திட்டமாக வழியில் உள்ள ஊர்களுக்கும் குடிநீர் வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திருச்சி மாவட்டத்திலுள்ள கட்டளைப் பகுதியிலிருந்து காவிரி நீரை சென்னைக்கு திறந்த ஆழமான கால்வாய் மூலம் கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) இல்லை.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் ஜேடர்பாளையத்தில் இருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை அமல் படுத்துவதற்கான வகையில் அதற்கென தனி அலுவலகம் திறக்கப்பட்டு விட்டதா? திருச்சியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர ஆய்வு செய்யப்பட்டுவிட்டதா? அதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா? அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு இருக்கிறது. செம்பரம் பாக்கம் வரையில் தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ. 259 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அங்கே இருந்து சுத்தம் செய்து சென்னைக்கு 'டிஸ்ட்ரிபியூஷன் லைன்' மூலமாகக் கொடுப்பதற்கு ரூ. 200 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 459 கோடி ரூபாய் அளவிற்கு மதிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அண்மையில் சென்னையிலுள்ள மக்களுக்கு தண்ணீர் எப்போது கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. அது ஆய்வு நிலையில்தான் இப்போது இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்றம் தொடங்கியதிலிருந்து நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் சென்னைக்கு வருகிறது என்று சொல்லப்படுகிறது. அப்புறம் வீராணம் என்று சொல்லப்படுகிறது. இப்போது ஜேடர்பாளையத்திலிருந்து திறந்த வெளி வாய்க்கால் மூலம் காவிரித் தண்ணீர் வருகின்றது என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டமும் நடைபெறக்கூடாது என்று சொல்லி, அதற்காக திருச்சியிலே மாநாடு நடத்தியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் தற்போது காவிரியிலிருந்து வருகிற தண்ணீர் தஞ்சை மாவட்ட விவசாயத்திற்குப் போதுமானதாக இல்லை. விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்தினால் பாதிப்பு ஏற்படும்; ஆகவே, இத்திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, இத்திட்டம் உடனடியாகக் கைவிடப்படுமா? மேலும் சென்னைக்கு தண்ணீர் கிருஷ்ணாவிலிருந்து வருமா? வீராணத்திலிருந்து வருமா? ஜேடர் பாளையத்திலிருந்து வருமா? ஆகாயத்திலிருந்து வருமா? பூமியிலிருந்து வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10—10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல ஜேடர் பாளையம் திட்டம் கைவிடப்படும்.

[1981 மார்ச் 25

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஜேடர்பாளையம் திட்டம் கைவிடப்படும் என்று சொல்லிவிட்டார்கள். ஜேடர் பாளையம் திட்டம் என்று கட்டளைக்கால்வாய்த் திட்டம் என்பதற்குப் பதிலாகப் பெயரைமாற்றிச் சொல்வார்கள் என்று சந்தேகப்படுகிறேன். ஆனால், இந்தத் திட்டத்தைத் தொடங்கு வதற்கு வழியில்லாத நிலையில் கைவிடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இது கட்டளைக் கால்வாய்த் திட்டம். ஆகையால்தான் ஜேடர்பாளையம் திட்டம் கைவிடப்பட்ட இருக்கிறது என்று சொன்னேன். கேள்வி கேட்டதிலே கொஞ்சம் மாறுதல். இருந்தாலும் பதில் சொல்லலாம் என்று நினைத்து சொன்னேன். கட்டளைக் கால்வாய்த் திட்டத்தில் 450 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதற்கு 459 கோடி ரூபாய் செலவாகும் என்றும் சொன்னேன். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டிக்கிறது.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இடையிலே சொன்ன பதிலின் காரணமாக, நான் கேட்ட கேள்விக்கு அவர்கள் சொன்ன பதிலை ஒட்டி மீண்டும் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினாலும் கூட, அதனால் ஏற்படக்கூடிய இடையூறுகள் எவை எவை என்பதை அந்த வட்டாரத்து மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். மொத்தத் தில் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் வடக்கே ஆந்திரத்திலிருந்து கிடைத்தால் தான் சென்னைக்கும் தமிழ் நாட்டுக்கும் பயன் படுவதாக இருக்குமே தவிர, சென்னை மாநகருக்கு ஆந்திராவில் இருந்து அந்தத் தண்ணீர் வராமல் வேறு தண்ணீர் வருவதால் தமிழ் நாட்டுக்கு அந்தத் தண்ணீர் பயன் படும் வாய்ப்பு இல்லை. எனவே, ஆந்திரத்திலிருந்து தண்ணீர் கிடைக்க இன்னும் அதிகமாகச் செலவானாலும் தமிழ கத்திற்கு அதனால் இலாபம் இருக்கிறது, பயனிருக்கிறது என்ற காரணத்தால், வேறு திட்டங்களைச் செயல் படுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் நாம் பெற வேண்டிய பயனைப் பெறமுடியாமல் போகும் சூழ்நிலை இருப்பதால் இது பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர் களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைப் பெறுவதற்காகக் கேள்வி கேட்டிருக் கிறார்கள். இந்த அரசு கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுக்க அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அதன் பிறகுதான் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.